**HMOP NO. 175 /2024**

**Date 05.03.2026**

**.ம.சா.1 பேச்சியம்மாள்**

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும் எதிர் மனுதாரருக்கும், 30.10.2017 ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது . மேற்படி திருமணத்தை 06.12.2017 ம் தேதியன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம் என்றால் சரிதான். எங்களது திருமணம் இந்நாள்வரை ஊஜிதத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், எதிர் மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணம் ஊர்ஜிதத்தில் இருக்கும் போது விவாகரத்து பெறாமல் நான் வேறொரு நபரை திருமணம் செய்தால் சட்டப்படி தவறு என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தற்போது சங்குப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சங்குப்பட்டியில் குடியிருக்கவில்லை என்றும், தற்போது ஆவல்நத்தம் என்ற ஊரை சேர்ந்த கார்த்திக் என்பவரை 2 வதாக மணமுடித்து அவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஆவல்நத்தம், மற்றும் சங்குப்பட்டியை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர்களை விசாரித்தால் உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 10 பவுன் தங்க நகை மற்றும், 10,000/- ரொக்க பணம், மற்றும், ½ பவுன் மோதிரம், 30000/- மதிப்புள்ள பண்ட பாத்திரம் கொடுத்துள்ளோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் எனது மாமியாருடன் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். அப்போது எனக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை என்றால் சரிதான். பின்னர் நான் எனது கணவரை அழைத்துக்கொண்டு தனிக் குடித்தனம் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. நாங்கள் தனிக்குடித்தனம் செல்லவில்லை. நாங்கள் தனிக்குடித்தனமாக சங்குப்பட்டியில் குடியிருந்தோம் என்றால் சரிதான். எனது மாமனார் இறந்து விட்டார்,. எனது மாமியாருக்கு எனது

கணவர் மட்டும் தான் ஒரே ஒரு ஆண் வாரிசு என்றால் சரிதான். எனது கணவர் தான் எனது மாமியாரை பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். எனது மாமியாருக்கு வயது மூப்பின் காரணமாக பல உடல்நல பிரச்சனைகள் உண்டு என்றால் சரிதான். அப்படியிருந்தோம் நான் எனது கணவரை கட்டாயப்படுத்தி அழைத்துக்கொண்டு வந்து எங்கள் ஊரான சங்குப்பட்டியில் தனிக்குடித்தனம் செய்து வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் தனிக்குடித்தனம் செய்யும் போது எனது தகப்பனார் எனது கணவரை அடித்து காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் எனது மனுவில் சங்குப்பட்டியில் தனிக்குடித்தனம் நடத்தியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது மனுவில் எனது கணவருடன் குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு எனது மனம் ஒத்துப்போகவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் அவரது கடமைகளை மனைவியாகிய எனக்கு சரிவர செய்து வந்தும், நான் தான் எனது கணவரை குடும்ப வாழ்க்கையில் இருந்து புறக்கணித்தும், அவரை கட்டாயப்படுத்தி தனிக்குடித்தனம் நடத்தியும், கொடுமைகள் செய்ததோடு அவரை வேண்டும் என்று புறக்கணித்தும், தான் தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் கருவுற்ற போது என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றும், என்னுடன் வாழ பிடிக்கவில்லை என்றும் மனுவில் கூறியுள்ளேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 20.12.2017 ம் தேதி முதல் நானும், எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நாங்கள் சங்குப்பட்டியில் எவ்வளவு காலம் குடியிருந்து வந்தோம் என்றால் 2018 ல் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்கள் மட்டும் தான் இருந்தோம். எதிர் மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தியதாகவும், தகாத வார்த்தைகள் பேசியதாகவும் சம்பவங்கள் எப்பொழுது நடந்தது என்று நான் எனது மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 09.12.2020 ம் வரைஎதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்ததாக சொல்வது பொய் என்றும், அதன் பின்னிட்டே எதிர் மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லியது பொய் என்றால் சரியல்ல. நான் திருமணம் ஆன காலமுதல் எதிர் மனுதாரரை கொடுமைகள் செய்து, நான்

வேறொரு நபரை திருமணம் செய்து கொண்டு எதிர் மனுதாரரை பிரிந்து தற்போது வேறொரு நபரை திருமணம் செய்து கொண்டு அவருடன் குடும்ப வாழ்க்கை நடத்தி அவருக்கு ஒரு குழந்தை உண்டு என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளுடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனது மனு தள்ளுப்படி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.